# கனடா: தமிழ் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாகும் நிலமை

(டொரன்டோ, December 21, 2004) இலங்கையில் சிறார் படையினர்கள் தொடர்பாக டிசம்பர் 12ம் திகதி ஸ்கார்புறோ சிவிக் சென்ரர் இல் நடத்தப்பட்ட பொதுக்கூட்ட நிகழ்வுகளைத் தொடர்ந்து, இலங்கைத் தமிழ் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் நிலமை தொடர்பாக ஹியூமன் றைட்ஸ் வொச் (HRW) தனது ஆழ்ந்த அக்கறையை தெரிவிப்பதாக இன்று அறிவித்தது.

இலங்கையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE) அமைப்பினால் சிறார்கள் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவதும் அவர்கள் படையினராக பாவிக்கப்படுவதும் தொடர்பாக ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பு அண்மையில் வெளியிட்ட அறிகையினை அடிப்படையாக வைத்து நடத்தப்பட்ட இப்பொதுக் கூட்டத்தில் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த 250 பேர் கலந்து கொண்டார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அங்கு வந்திருந்த, புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்ட பலர் பெரும் சத்தமிட்டும் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தும் தொடர்ச்சியாக கூட்டத்தை குழப்ப முற்பட்டதுடன், அவர்களில் சிலர் கூட்டத்தில் பங்கு பற்றியவர்களை புகைப்படம் மற்றும் வீடியோ படம் எடுத்தனர்.

இப்பொதுக் கூட்டம் நடத்தி முடிக்கப்பட்டதன் பின்பு, ரொரன்டோ மற்றும் நியூ யோர்க்கில் உள்ள ஹியூமன் றைட்ஸ் வொச் காரியாலயங்களுக்கு புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்கள் எனக் கருதப்படுபவர்களிடம் இருந்து அச்சுறுத்தல் பாணியிலான தொலைபேசி அழைப்புக்கள் விடுக்கப்பட்டன. ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்போடு நெருக்கமாக தொடர்பு வைத்து பணியாற்றுகின்ற கனடா வாழ் தமிழர்களை ஆபத்துக்குள்ளாக்கும் வகையில் அவர்களின் விபரங்களை அம்பலப்படுத்தப் போவதாகவும் இத் தொலைபேசி அழைப்புக்கள் மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளன.

"தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களினால் கடந்த காலங்களில் ரொறன்ரோவில் வாழும் தமிழ் சமூகத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள வன்முறைகள் மற்றும் அச்சுறுத்தல் நடவடிக்கைகள் காரணமாக, எமது காரியாலயங்களுக்கு விடுக்கப்பட்ட இத்தீய நோக்கங்களுடனான தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பாக நாம் மிகுந்த அக்கறை கொள்கின்றோம்," என ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பின் ஆசிய பிராந்திய நிறைவேற்றதிகார பணிப்பாளரான ப்ராட் அடம்ஸ் (Brad Adams) கூறினார். "இவ் விடயம் தொடர்பாக கனேடிய அதிகாரிகள் உடனடியான விசாரணைகளை மேற்கொண்டு, இக்கூட்டத்தில் பங்குபற்றியவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வார்கள் எனவும் நாம் நம்புகின்றோம்." எனவும் இவர் மேலும் தெரிவித்தார்

இத்தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பாக ஹியூமன் றைட்ஸ் வொச் அமைப்பானது ஸ்கார்புறோ பொலிசாருக்கும் அறிவித்துள்ளது.